# தமிழ் வளர்த்த சமணம்

முனைவர் ச.வைத்தீஸ்வரன்
தமிழ்த்துறை,
கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை
Mail id: sveswaran45@ gmail.com

34

**ஆய்வுச்சுருக்கம்:**

சமயம் என்பது கடவுள் நம்பிக்கை சார்ந்த ஓர் அமைப்பாக கருதப்படுகிறது.. பண்டைக்காலத்தில் இலக்கியங்களை வளப்படுத்த சமயங்கள் பெரிதும் உதவியாக இருந்தன. சமண சமயம் கி.பி 3-ஆம் நூற்றாண்டில் பத்திரபாகு என்னும் மன்னன் மூலம், தமிழகத்தில் நுழைந்ததாகக் கூறுவர். தமிழ்மொழி வழியாக சமண சமயக் கருத்துக்களை மக்களிடம் பரப்பும் முயற்சியில் சமணர்கள் ஈடுபட்டார்கள். சமணத்துறவிகள் திரமிள சங்கம் (தமிழ்ச்சங்கம்) என்ற ஒன்றை உருவாக்கி தமிழ்ப்பணி ஆற்றினர். இச்சங்கத்தை திராவிட சங்கம் என்றும் கூறுவர். தமிழ்மொழி வளர்ச்சிக்குச் சமண சமயப் புலவர்கள் ஆற்றிய தமிழ்த்தொண்டினையும் அவர்கள் படைத்த தமிழ் நூல்களையும் எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**ஆய்வு நோக்கம்:**

சமணர்களின் தமிழ்ப்பணி பிற சமயத்தார் செய்த தமிழ்ப் பணியைக் காட்டிலும் சிறப்புடையதாகும். தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பங்காற்றிய சமண சமயப் புலவர்களின் தமிழ்த் தொண்டினையும் அவர்கள் படைத்த தமிழ் நூல்களையும் அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:**

1. அருகன் - சமண சமயக் கடவுள்
2. பஞ்சபரமேட்டிகள் - அருகன் ஆச்சாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் சித்தர் போன்றோர்.
3. நிகண்டன் - சமண சமயத்தவர் என்று பொருள்
4. லோச்சு - தமிழில் உலோச்சு என வழங்கலாயிற்று.
5. எம் ஒத்து - எங்கள் வேதம்

**சமணம் என்ற சொல்லின் தோற்றம்:**

சமணம் தமிழ் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பரவியிருந்தது. கி.பி.7,8-ஆம் நூற்றாண்டு வரை மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. "அருக பதவியை அடைந்தவர்களாகிய தீர்த்தங்கரர்களது சரித்திரங்கள் அறிவூட்டுவன என்றும் புண்ணியம் பயப்பன என்றும் இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை விளைவிப்பன என்றும் சமணர் கருதினர் என்று வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். இதனால் சமணச் சொற்கள் சில பழைய இலக்கியங்களில் புகுந்தன. சமண என்னும்

சொல் **(Shramana)** என்ற சமஸ்கிருத சொல்லிலிருந்து வருவிக்கப்பட்டது. மொழி முதல் மெய்மயக்கம் (ண், ஹ தவிர) பிராகிருத மொழியில் தவிர்க்கப்படுகிறது. மெய்மயக்கத்தில் வரும் ரகரம் கெட்டுப் பின்னர் தமிழில் சமண என்றாகிறது. சமண என்பது மேலும் தமிழ் மொழியில் சகரம் முதல் கெட்டு அமண (அமண்) என்றாகிறது. இந்த வடிவமும் (அமண்) தேவாரத்தில் அதிகமாக வருகிறது. சமண வேதம் பழமை வாய்ந்த ஒரு சமய இயக்கம். பிராமண சடங்குகளையும் வேள்விகளையும் எதிர்த்த இயக்கம் Shramana என்ற சொல் புத்த, சமணம் என்ற இரண்டையும் இணைத்து குறித்தது. பின்னாளில் சமணத்தை மட்டும் குறித்தது"1 என்று மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**சமணமும் தமிழும்:**

சமணர்களின் வாழ்வு தமிழ் நாட்டின் வரலாற்றுடன் பிரிக்க முடியாத நிலையில் இரண்டறக்கலந்துள்ளது. இதன் விளைவாக தமிழில் எண்ணற்ற நூல்கள் தோன்றின. மொழி வளர்ச்சிக்குச் சமணர்கள் இன்றியமையாத பங்காற்றினர். அவர்கள் அறங்களைப் பரப்புவதற்குத் தமிழ் மொழியை கருவியாகக் கையாண்டனர். இலக்கணங்கள், காப்பிய நூல்கள், அற நூல்கள், நிகண்டு நூல்கள், மருத்துவ நூல்கள், வான சாத்திர நூல்கள் மற்றும் தர்க்க சாத்திரம் போன்ற நூல்களையும் சமணர்கள் தமிழில் படைத்துள்ளனர். மேலும் சமணர்கள் கல்வி, கேள்விகள் மற்றும் வாதம் புரிவதிலும் சிறந்து விளங்கியதோடு தியாக உள்ளத்தோடு பொதுத்தொண்டுகள் செய்து, அனைவரையும் சமமெனக் கருதினார்கள். சமணர்கள் ஒழுக்கத்தாலும் கல்வியாலும் மேன்மை எய்தியதுடன், பிறர் மேன்மையுறவும் வழிகாட்டினார்கள். சமண சமயம் தமிழ்நாட்டில் சுமார் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகள் மிகச்சிறப்புடன் திகழ்ந்ததற்குச் சமணர்களின் பொதுத்தொண்டோடு கூடிய நல்லொழுக்க பொதுக் கொள்கையே காரணம் என்று சமணமும் தமிழும் என்ற நூலில் மயிலை சீனி.வேங்கடசாமி குறிப்பிட்டுள்ளார்."2

சமணர்கள் மக்களிடையே பொதுத்தொண்டோடும் நேர்மையோடும் வேற்றுமை கருதாது பழகினர். மக்களுக்கு இன்றியமையாத பயன்தரத்தக்க மருத்துவம் மற்றும் கல்வி ஆகியவற்றிற்கு முதன்மை அளித்தனர். சமூகத்தில் ஆண், பெண் என இருபாலரும் தொண்டு உள்ளத்தோடு பணிபுரிந்தனர். அடைக்கலம் என்று வந்தோரை ஆதாரித்து மக்களுக்கு உணவளித்தனர். கொள்கை பரப்புவோர் சொல் - செயல் ஒன்றாகித் தூய்மையுடையோராய் இருத்தனர். பிற சமயக் கொள்கையாளர்களைப் பழிக்காமையும், உள்ளம் புண்ணாகப் பேசாமையும் சமணர்களின் சிறந்த பண்புகளாகத் திகழ்ந்தன. சமணர்கள் இப்பண்புகளைத் தொடர்ந்து கடைப்பிடித்தமையினால் மக்கள் சமுதாயத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்து தமிழுக்குப் பொதுப்பயன் அளிக்கும் பல்வேறு இலக்கண, இலக்கிய நூல்களை இயற்றி தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றினர்.

**தமிழிலக்கிய வளர்ச்சியில் சமணப்புலவர்கள்:**

**1. நிகண்டன் கலைக்கோட்டு தண்டனார்:**

சங்கப்புலவர்களுள் ஒருவரான நிகண்டன் கலைக்கோட்டு தண்டனார். நிகண்டு நூல் ஒன்றை எழுதியுள்ளதோடு, சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணையில்,

**“கானல் மாலைக் கழி நீர் மல்க,**

**நீல் நிற நெய்தல் நிரை இதழ் பொருந்த ,**

**ஆனாது அலைக்கும் கடலே, மீன் அருந்தி**

**புள்ளினம் குடம்பை உடன் சேர்பு உள்ளார்”3**

என்ற பாடலைப் பாடியுள்ளார். இப்புலவர் நிகண்டு நூல் எழுதியதால் நிகண்டனார் என்று அழைக்கப்படவில்லை என்றும் நிகண்டன் என்பதற்குச் சமணத்தவர் என்று பொருள் கூறப்படுகிறது.

**2.உலோச்சனார்:**

உலோச்சனார் என்பவர் சங்ககால சமணப்புலவர் ஆவார். சமணர்கள் துறவு மேற்கொள்வதற்கு முன்பு தீட்சை பெறுவது வழக்கம். அப்பொழுது உண்ணா நோன்பிருந்து தலைமுடியைக் கையினால் பிடுங்கி நீக்குவர். இச்சடங்கை ‘லோச்சு’ என்று சமணா;கள் குறிப்பிடுவர். இப்பெயர் உலோச்சு என்று தமிழில் வழங்கலாயிற்று. இச்சடங்கை இப்புலவர் மேற்கொண்டதால் உலோச்சனார் என்று அழைக்கப்பட்டார். உலோச்சனார் நற்றிணையில் 20 பாடல்கள், குறுந்தொகையில் 4 பாடல்கள், அகநானூற்றில் 8 பாடல்கள் , புறநானூற்றில் 3 பாடல்கள் என சங்க இலக்கியங்களில் 35 பாடல்களைப் பாடியுள்ளார். “சங்க நூல்களுள் எட்டுத்தொகை நூல்களான அகநானூற்றில் 59-ஆம் பாடலிலும் புறநானூற்றில் 175-ஆம் பாடலிலும் சமணக் குறிப்புகள் காணப்படுகின்றன.”4

தமிழில் முதன் முதலாக காப்பியங்கள் இயற்றியவர்கள் சமணர்களே. “கி.பி.2-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தை சமணத்துறவியான இளங்கோவடிகளும், சமண காப்பியமான சீவகசிந்தாமணியைப் புகழ்பெற்ற சமணப்புலவரான திருத்தக்கத்தேவரும், இயற்றினர். மேலும், கொங்குவேள் என்னும் சமணப்புலவர் பெருங்கதை என்றழைக்கப்படும் ஐஞ்சிறு காப்பியமான உதயணகுமார காவியத்தை ஆசிரியப்பாவினால் அமைத்து உதயணன் என்னும் அரசனின் வாழ்க்கை வரலாற்றை தமிழில் படைத்துள்ளார்.”5 காப்பிய வளர்ச்சிக்கு சமணப்புலவர்கள் பெரும் பணியாற்றியுள்ளார்கள் என்பதை தமிழ் இலக்கிய வரலாறுகள் எடுத்துரைக்கின்றன.

**சமணர்கள் இயற்றிய தமிழிலக்கண நூல்கள்:**

கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் அகத்தியரின் மாணாக்கர் அவிநயனார் என்பவரால் அவிநயம் இயற்றப்பட்டது. இந்நூல் எழுத்து, சொல், யாப்பு, பாட்டியல்களை விளக்குகின்றது. அவிநயத்தை அடியொற்றி ‘நாலடி நாற்பது’ என்னும் நூலை அவிநயனார் இயற்றியுள்ளார். இந்நூலுக்கு அவிநயப்புறனடை என்ற வேறு பெயரும் உண்டு. கி.பி.10-ஆம் நூற்றாண்டில் ‘யாப்பருங்கலம்’ அமிர்தசாகரர் என்பவரால் இயற்றப்பட்டது. இந்நூலுக்கு யாப்பருங்கலவிருத்தி என்ற மற்றொரு பெயரும் உண்டு. இந்நூல் யாப்பிலக்கணம் பற்றி விரிவாகப் பேசுகிறது. யாப்பருங்கலக்காரிகை-

கி.பி.10-ஆம் நூற்றாண்டில், அமிர்தசாகரர் என்பவரால் இயற்றப்பட்ட யாப்பிலக்கணம் பற்றிக் கூறும் நூல். நேமிநாதம் - கி.பி.13-ஆம் நூற்றாண்டில் நேமிநாதர் பெயரால் பாடப்பட்டதால் நேமிநாதம் என பெயர் பெற்றது. இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்ற இரண்டு அதிகாரங்களில் மொழி மரபு முதல் எச்ச மரபு ஈறாக 9 பிரிவுகளில் 96 நூற்பாக்களில் அடக்கிக்கூறும் நூல். இந்நூல் 'சின்னூல்' என்றும் சிறப்பிக்கப்படுகிறது. கி.பி.13-ஆம் நூற்றாண்டில் குணவீரபண்டிதர் என்பவர் தனது ஆசிரியரான வச்சணந்தியின் பெயரால் எழுதப்பெற்ற நூல் வச்சணந்திமாலை. இதன் வழி நூல் இந்திரகாளியம் என்பதாகும். வெண்பா பாட்டியல் என்ற பெயரும் இந்நூலுக்கு உண்டு. இது 96 சிற்றிலக்கியங்கள் பற்றி பேசுகிறது. நன்னூல் - கி.பி.13-ஆம் நூற்றாண்டில் சீயகங்கன் என்னும் மன்னன் வேண்டிக்கொண்டதற்கு ஏற்ப பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட நூல். எழுத்து, சொல் இலக்கணங்களை எடுத்துரைக்கின்றது. இதன் மூல நூல் தொல்காப்பியமாகும். நம்பியகப்பொருள்- நாற்கவிராசநம்பி என்பவரால் இயற்றப்பட்ட அகத்திணை நூல். இந்நூல் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், ஒழிபியல் என்னும் ஆறு பிரிவுகளைக்கொண்டது.

**நிகண்டு நூல்கள்:**

தொல்காப்பிய உரியியல், மரபியல்களின் வளர்ச்சி பெற்ற வடிவம் நிகண்டு எனலாம். இவை செய்யுள் வடிவில் அமைந்து பொருள் விளக்கம் தருவன. மொழியியல் காணப்படும் அரியச் சொற்களை வரையறுத்துப் பொருள் கூறுகின்றன. 1. திவாகர நிகண்டு - கி.பி.9-ஆம் நூற்றாண்டில் திவாகர முனிவரால் இயற்றப்பட்ட முதல் நிகண்டு நூலாகும். இந்நூல் ஆதிநிகண்டு என்றும் அழைக்கப்படுகிறது. இந்நிகண்டு 9500 சொற்கள் பற்றி ஆராய்கிறது. 2. பிங்கலந்தை நிகண்டு - கி.பி.10-ஆம் நூற்றாண்டில் பிங்கல முனிவரால் இயற்றப்பட்ட நிகண்டு நூல். இந்நூல் 15791 சொற்களைப் பற்றி விவரிக்கின்றது. 3. உரிச்சொல் நிகண்டு - காங்கேயர் என்பவரால் இயற்றப்பட்ட இந்நிகண்டு நூல் 3200 சொற்கள் பற்றி விவரிக்கின்றது. 4. சூடாமணி நிகண்டு - கி.பி16-ஆம் நூற்றாண்டில் மண்டில புருடர் என்பரால் இயற்றப்பட்ட 11,000 சொற்களுக்கு விரிவு கூறும் நிகண்டு நூலாகும். இவை தவிர கயாதர நிகண்டு, அகராதி நிகண்டு, ஆசிரிய நிகண்டு, கைலாச நிகண்டு, நாபதீப நிகண்டு, பொதிகை நிகண்டு எனப் பல நிகண்டு நூல்களையும் சமணா;கள் இயற்றியுள்ளனர்.

**சிற்றிலக்கியங்கள் :**

கி.பி.8-ஆம் நூற்றாண்டில் மயிலைநாதர் மேல் பாடப்பட்ட அவிநயனாரால் இயற்றப்பட்ட பாவைப்பாட்டும், அவிரோதிநாதரால் இயற்றப்பட்ட திருவெம்பாவை ஆகிய இரு பாவை நூல்களும் மார்கழி மாதத்தில் சமணர்களால் பாராயணம் செய்யப்படுகின்றன. திருநூற்றந்தாதி - கி.பி.14-ஆம் நூற்றாண்டில் அவிரோதிநாதரால் 100 கட்டளைக்கலித் துறைகளால் அந்தாதி யாப்பில் 22- வது தீர்த்தங்கரராகிய நேமிநாதர் பற்றிய அருகனைப் புகழும் நூலாகும். திருக்கலம்பகம் - கி.பி.15-ஆம் நூற்றாண்டில் உதீசித்தேவரால் கலம்பக உறுப்புகள் பதினெட்டில் 16 உறுப்புகளைக் கொண்டு 110 பாக்களால் பாடப்பட்ட நூலாகும். ஆதிநாதா; பிள்ளைத்தமிழ் - 15-ஆம் நூற்றாண்டில் ஆதிநாதர் என்னும் தீர்த்தங்கரரைப் பற்றிய காப்பு செங்கீரை முதலான 10 பருவங்களைக் கொண்ட சந்த

நலமிக்க நூலாகும். சித்தாந்த நூல் - சீவசம்போதனை 150 பாடல்களைக் கொண்ட சமண சித்தாந்த நூலாகும். இந்நூலில் செய்யுளும் உரைநடையும் கலந்த சமண சித்தாந்தங்கள் கூறப்பட்டுள்ளன. மேலும் நீதி நூல்களான நாலடியார், பழமொழி, ஏலாதி, சிறுபஞ்சமூலம், திணைமாலை நூற்றைம்பது, ஆசாரக்கோவை, அறநெறிச்சாரம், அருங்கலச்செப்பு, ஜீவசம்போதனை, ஔவை (ஆத்திச்சூடி), நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், கொங்குமண்டல சதகம், நேமிநாத சதகம், கெட்டி எண்சுவடி, கணக்கதிகாரம், நல்விலக்க வாய்ப்பாடு, சீமூவாய் இலக்கம், பெருக்கல் வாய்ப்பாடு போன்ற கணித நூல்களையும், பெருங்குருகு, பெருநாரை, செயிற்றியம், பரத சேனாபதியம், சயந்தம் போன்ற இசைநூல்களையும், ஜினேந்திரமாலை, உள்ளமுடையான் ஆகிய சோதிட நூல்களையும் படைத்து தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றினா;.

**முடிவுரை:**

இலக்கியங்கள் மனித வாழ்வியலுக்கான சமய சிந்தனைகளைப் பிரதிபலித்து அதற்கான சமூக ஒருமைப்பாட்டினையும் வலியுறுத்துகின்றன. தமிழ்மொழி வழியாகச் சமண சமயக் கருத்துக்களை மக்களிடம் பரப்பும் நோக்கில் சிறப்புமிக்க பல தமிழ் நூல்களையும் படைத்து தமிழ் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய சமணர்களின் தமிழ்ப்பணி போற்றுதற்குரியதாகும்.

**அடிக்குறிப்புகள்:**

1. மயிலை. சீனி. வேங்கடசாமி , சமணமும் தமிழும், பக். 170
2. மயிலை. சீனி. வேங்கடசாமி , சமணமும் தமிழும், பக். 173
3. முனைவர் கு.வெ.பாலசுப்பரமணியன், நற்றிணை மூலமும் உரையும். பா.382
4. பாக்கியமேரி தமிழலக்கிய வரலாறு.பக்.290
5. முனைவர் வெங்கடேசன் நடுநாட்டில் சமணம்,பக். 9

**துணை நூல்கள்:**

1. உரையாசிரியர் கு.வெ.பாலசுப்பரமணியம், - நற்றிணை மூலமும் உரையும், -2004, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர் - சென்னை - 600 098.
2. பாக்கியமேரி - தமிழிலக்கிய வரலாறு-2008, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர் - சென்னை - 600 098.
3. மயிலை. சீனி. வேங்கடசாமி , சமணமும் தமிழும் -2010, செண்பகா பதிப்பகம், சென்னை.17.
4. முனைவர் வெங்கடேசன் - நடுநாட்டில் சமணம் - 2004, திருமுடி பதிப்பகம், கிழக்கு சன்னதி தெரு, வில்லியனூர் ஸ்ரீ புதுவை மாநிலம் 605 110.